முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நாதாந்தச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

25.09.2018, செவ்வாய்க்கிழமை

1. **முருகா அரங்கா மூலகுருவே**
**முழுமை ஞானம் அருளி காக்க**
**ஆறுமுக அரங்கமகானாக வந்த**
**அண்ணலே உன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தரிவை திங்கள்**
**தெரியவே நவதிகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 9ம் நாள் 25.09.2018, செவ்வாய்க்கிழமை)**
**தேசிகனுக்கு நாதாந்தச்சித்தர் யானும்**

3. யானுமே உலகநலமுற உரைப்பேன்
உயர்வான நிலைகள்தனை அடைய
ஞானவழி காட்டி அருளுகின்ற
ஞானதேசிகன் உபதேசங்கள்தனை ஏற்று

4. ஏற்றுமே முழுமதி கால பூசையில்
எல்லோரும் கலந்து நன்கு
ஆற்றல் பெருக்கம் கண்டு
அரங்கன் வளர்க்கும் தருமத்தை

5. தருமத்தை எங்கும் வளர்க்க
தரணியே மாற்றம் பெறும்
தரும உலகம் ஆகுமென்பேன்
தவராசனை மானச பூசை வழி

6. பூசை வழி தூரதேச மக்களும்
புண்ணியமுடன் வழிபாடு செய்ய
நேசமுடன் குருவருள் பெருகி
ஞானிகள் அருளாசி அடைவர்

7. அடையவே சமதர்ம சமத்துவ
அருளுவேன் ஞானபூமியை
சோடை நீக்கி உருவாக்கிட
சுத்தநெறி கொண்டு அரங்கன் இயங்க

8. இயக்கவே மக்களிடை மனபக்குவம்
எல்லாம் சமம் எனும் உயர்நிலை
தயக்கமிலா தன்னார்வ துணிவும்
தயவும் பெருகி உலக வளர்ச்சி

9. வளர்ச்சி ஞானிகள் மூலமே
வையகம் கண்டடைய நேரும்
தளர்வுபட இருக்கும் ஆளுமை
தவராசன் ஆசிக்கு வர

10. வருகவே ஆளுமை திடம் வளம்
வள்ளல் தன்மையான ஆளுமை
முருகப்பெருமான் அருளும் தயவும்
முழுமைபட கண்டு உயர நேரும்

11. நேருமைபட தரும பலமே
நிர்வாகம் நீதித்துறை நிதிநிலையென
வருமுலகில் மாற்றம் ஏற்றமருளும்
வழங்கிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் நாதாந்தச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஞானம் அளித்து காக்கும் முருகப்பெருமானே மூலகுருநாதனே அரங்கமகா தேசிகனே உம்மை நம்பினோர்க்கு உண்மை ஆன்மீகம் போதித்து முழுமை ஞானம் அருளிக் காத்து ரட்சிக்கவே ஆறுமுக அரங்கமகா தேசிகனாக வந்துதித்த அண்ணலே அற்புதமே மகா ஞானியே அரங்கா உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 9ம் நாள் 25.09.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே நாதாந்தச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நாதாந்தச்சித்தர்.

உலகினில் உள்ள மக்களெல்லாம் உயர்வான நிலையை அடைந்திடவே அவர்களுக்கு ஞானவழிதனை காட்டி அருள் செய்து உபதேசித்து வழிநடத்துகின்ற ஞானகுரு ஆறுமுக அரங்கமகாதேசிகனார் கூறும் உபதேசங்களை அவரவரும் பணிவுடனும் பக்தியுடனும் ஏற்றுக் கொண்டு அவரவரும் அரங்கன் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடிச் சென்று ஆங்கே உலக நலன் கருதி மாதந்தோறும் பௌர்ணமி தினத்திலே அரங்கன் முருகப்பெருமானையும் முற்றுப்பெற்ற ஞானிகளையும் முன்னிறுத்தி நடத்துகின்ற ஞானபூஜைகளிலே கலந்து கொண்டு முருகப்பெருமானின் ஆசிகளையும், ஞானிகள் ஆசிகளையும், அரங்கன் ஆசியையும் பெற்று ஆற்றல் பெருக்கம்தனை கண்டு கொள்வதோடு ஆங்கே உலக உயிர்கள் நலம் பெறும்வகையில் அரங்கன் செய்யும் தானதருமப் பணிகளுக்கு அவரவரும் தருமத்தினை வளர்க்கும்விதமாக தாராளமாய் பொருளுதவிகள் செய்துவர, உலகினில் முருகப்பெருமானின் அருளும் தருமமும் பெருகி உலகம் முழுதும் தருமம் வளர்ந்து பெருகி உலகமே தருமஉலகமாக ஆகிடும்.

தவராஜனான ஆறுமுக அரங்கமகா தேசிகனை எந்நேரமும் மானசீகமாக பூஜைகள் மூலம் தொலைவில் உள்ள அயல்நாட்டவர்களும் வழிபாடுகள் செய்திட்டால் அவர்கள் மீதும் கருணை கொண்டு அரங்கன் அருள்புரிவான். அவர்கள் அரங்கன் ஆசிகளை பெறுவதோடு ஞானிகளின் அருளாசிகளையும் அடைந்து சிறப்படைவார்கள்.

சமதர்ம சமத்துவ ஞானபூமியை உலகினில் உள்ள குற்றம்குறைகளை எல்லாம் நீக்கி சுத்தபூமியாக உருவாக்கிடவே உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவஉணவை

மேற்கொண்டு வருகின்றதான சுத்தநெறியினைக் கொண்டு ஆறுமுக அரங்கனும் இயங்கி வருகின்றார்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் புனிதமான செயல்பாடுகளினாலும் அரங்கனின் தூயநெறிக் கொள்கையினாலும், தருமபலத்தினாலும் உலகினில் உள்ள மக்களிடையே மனப்பக்குவம் பெருகி எல்லாம் சமம் என்கிற உயர்வான நிலை உருவாகி தன்னார்வமாய் பொதுநலத்திற்காக தயக்கமில்லாது துணிவுடன் தொண்டுகள் செய்து தயவு உணர்வு பெருகி உலக வளர்ச்சியும் ஞானிகளின் மூலமாக நடந்தேறும்.

தற்சமயம் தளர்வுபட நடக்கின்ற ஆட்சிகளெல்லாம் தவராசன் அரங்கன் ஆட்சிக்கு வர ஆளுமை திடம் வளம் பெருகி வள்ளல் தன்மையும் பெருகி அன்பும் வள்ளல் தன்மையும் உடைய முருகப்பெருமானின் ஆட்சி உலகினில் அமைந்து முருகப்பெருமானின் அருளும் தயவும் முழுமையாக இவ்வுலகம் அடைந்து உயர்வான நிலைக்கு செல்லும்.

உலகினில் உள்ள தர்மபலமே நிர்வாகம், நீதித்துறை, நிதிநிலை என்றே மாற்றம் அடைந்து தர்மத்தின் வழிதனிலே உலகம் சென்று சிறக்கும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் நாதாந்தச்சித்தர்.

–சுபம்–